## முதன்மை சார்பு நீதிமன்றம், பொன்னேரி

## இ.ஏ.எண். 56/2017

## இன்

## இ.பி.எண். 33/2017

## இன்

## ஓஎஸ் எண் 01/2002

**நாள் :18.08.2023.**

இந்நீதிமன்ற எழுத்தரால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு ம.சா.2 சாட்சியின் வாக்குமூலம் 1878ம் ஆண்டில் 10-வது சட்டத்தின் வரைமுறைகளுக்கு உட்பட்டு பதிவு செய்யப்பட்டது.

பெயர் : ம.சா.2. திரு. கோபாலகிருஷ்ணன்

வயது :

த/பெ :

தொழில் :

மதம் :

விலாசம் :

**எதிர்மனுதாரர்கள் தரப்பு குறுக்கு விசாரணை :-**

இவ்வழக்கில் சாட்சி சொல்வதற்கு நீதிமன்றத்திலிருந்து சம்மன் ஏதேனும் வந்ததா என்றால் இல்லை. இவ்வழக்கு நீதிமன்றத்தில் நடந்து வரும் விவரம் எனக்கு எவ்வாறு தெரியும் என்றால் எனது தம்பி சொல்லி தான் தெரியும். என் தம்பி சொல்லி தான் சாட்சி சொல்ல வந்திருக்கிறேன் என்றால் சரிதான். பிரமாண பத்திரம் உள்ள சங்கதிகள் யார் சொல்லி தயார் செய்யப்பட்டது என்றால் என் தம்பி சொல்லி தான் தயார் செய்யப்பட்டது. பிரமாண பத்திரத்தில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். இந்த வழக்கு முதலில் எப்போது தாக்கல் செய்யபட்டது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. இந்த மனு எந்த வருடம் தாக்கல் செய்யப்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. பிரமாண பத்திரத்தில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியாது என்றால் சரிதான் . அதன்பிறகு படித்து பார்த்து தெரிந்து கொண்டேன். எனது பிரமாண வாக்குமூலத்தில் பாக பிரிவினை வழக்கு நடந்ததாக சொல்லி இருக்கிறேன் அது எந்த வருடம் நடந்தது என்றால் 1997 ல் நடந்தது. 1998ல் தீர்ப்பானது. 1998ல் தீர்பான பிறகு தான் எங்களுக்குள் பாக பிரிவினை செய்துகொண்டோம் என்றால் சரிதான். 1997ல் பாக பிரிவினை ஏற்படுவதற்கு முன்பாகவே மனுதாரர் சொத்தை பாபு என்பவருக்கு விற்றுவிட்டார் என்று எனது பிரமாண வாக்குமூலத்தில் சொல்லி இருக்கிறேன் என்றால் சரிதான். எனது பிரமாண வாக்குமூலத்தில் பக்கம் 2 பத்தி 2ல் சர்வே எண்கள் சொல்லி இருக்கிறேன் அதில் எந்த சர்வே நம்பரில் பாபு சொத்தை வாங்கினார் என்றால் சர்வே எண்.389/2 , 17 செண்ட் . அந்த 17 செண்ட் நிலத்தை 1997ல் பாபு வாங்கிவிட்டார் என்றால் சரிதான். மனுதாரர்

மேற்சொன்ன சொத்தை வீடு கட்டுவதற்கும் அவருடைய குழந்தைகளின் படிப்புக்கும் பாபுவிடம் விற்றார் என்றால் சரிதான். மனுதாரர் எந்த வீடு கட்டினார் என்றால் அவருடைய மனைவியின் பாகத்தில் வீடு கட்டினார். அதற்கான ஆவணங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியுமா என்றால் என்னால் தாக்கல் செய்ய முடியாது. மனுதாரருக்கு குழந்தை எந்த வருடம் பிறந்தது என்று எனக்கு தெரியாது. மனுதாரருக்கு 1998 ல் குழந்தை பிறந்தது என்றால் சரிதான். எனது பிரமாண வாக்குமூலத்தில் இந்திய வாரிசு உரிமை சட்டம் பிரிவு 6 மற்றும் 8 செல்லதக்கது அல்ல என்று சொல்லி இருக்கிறேன் அதற்கான விளக்கம் என்னவென்றால் எனது தந்தை சுயமாக சம்பாதித்த சொத்தை வாரிசுகளான நாங்கள் 6 பேர் திருவள்ளூர் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்து சொத்தை பிரித்து கொண்டோம். அதன்படி அவருடைய வாரிசு தாரர்கள் சொத்தை ஆண்டு அனுபவித்து வந்தனர். மனுதாரர் அவருடைய சொத்தை விற்றுவிட்டார். எனது பிரமாண வாக்குமூலத்தில் பக்கம் 2 பத்தி 2ல் பாக பிரிவினை வழக்கு 332/1992 சொல்லி இருக்கிறேன். அந்த வழக்கு படி சமரசம் ஏற்பட்டது என்று சொல்லி இருக்கிறேன் என்றால் சரிதான். ஏற்கனவே குறுக்கு விசாரணையில் கேட்கும்போது 1997 என்று சொல்லி இருக்கிறேன் என்றால் தவறுதலாக சொல்லி உள்ளேன். மனுதாரர் என்னுடைய உடன்பிறந்த சகோதரர் என்பதாலும் அவருடைய பிள்ளைகள் சொத்தை அனுபவிக்க கூடாது என்பதற்காக அவருக்கு பவியபட்டு பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**(மறுவிசராரணை இல்லை)**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்ன சங்கதிகள் அனைத்தும் அவர் கூறியவாறே என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப் பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டு கையொப்பம் / கைரேகை பெறப்பட்டது.

**முதன்மை சார்பு நீதிபதி**
**பொன்னேரி.**